## எதையும் பிரம்மாண்டத்தோடு செய்து, ஒரு பெருமிதத்தைக் காட்டக் கூடிய வல்லமை பெற்றவர் அமைச்சர் சேகர்பாபு!

# உலகத்திலேயே 100 ஆண்டுகள் உயிர்ப்போடு திகழும் வரலாறு திராவிடத் தத்துவத்திற்கே உண்டு!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற பாகமுகவர்கள் கூட்டத்தில் ஆ.இராசா எம்.பி. உரை!

**சென்னை, செப். 14–**

**சென்னை கிழக்கு மாவட்டம் - அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி - பாக முகவர்கள், பாக சமூக வலைதள முகவர்கள், பாக இளைஞரணி ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளரும் - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் சிறப்புற நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. உரையாற்று கையில், "எதையும் பிரம்மாண்டத்தோடு செய்து, ஒரு பெருமிதத்தைக் காட்டக்கூடிய வல்லமை பெற்றவர் அமைச்சர் சேகர்பாபு" என்றும் "உலகத்திலேயே 100 ஆண்டுகள் உயிர்ப்போடு திகழும் வரலாறு திராவிடத் தத்துவத்திற்கே உண்டு" என்றும் குறிப்பிட்டார்.**

இக்கூட்டத்தில் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

நம்முடைய அன்புத் தலைவர் அவர்கள், நேற்றைய தினம் வெளிநாடு பயணத்தை முடித்துக் கொண்டு வந்து, உடனடியாக காணொலிக் காட்சியின் வாயிலாக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தைக் கூட்டினார்.

அப்போது அவர் அன்பான ஒரு வேண்டு கோளை வைத்தார். "உங்களுடைய அன்பால் - உங்களுடைய ஆதரவால், கழகத்தின் தலைவர் என்கிற முறையில், ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று முதலீடுகளைப் பெற்றது மட்டுமல்ல; நம்முடைய தத்துவத் தந்தை - தந்தை பெரியாரை விதைத்து விட்டு வந்திருக்கிறேன். அந்த உரிமையோடு சொல்கிறேன்... சட்டப் பேரவைத் தேர்தல் முடிகிற வரை, தூக்கத்தை தள்ளி வையுங்கள்; உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையைக்கூட தள்ளி வையுங்கள்; இந்த இயக்கத்திற்காக - மீண்டும் இந்த ஆட்சி மலர்வதற்காக பணியாற்றுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

அந்தக் குரல் கேட்டு இன்னும் 24 மணி நேரம் முடியவில்லை. அதற்குள்ளாக நம்முடைய சேகர்பாபு அவர்கள், தலைவர் இட்ட கட்டளையை இப்படி ஒரு பிரம்மாண்டத் தோடு நடத்துவார் என்று நான் எதிர்பார்க்க வில்லை.

நேற்றைய தினம், இந்தியாவின் குடியரசுத்துணைத்தலைவர் தேர்தலுக்காக டெல்லி சென்றிருந்தோம். அந்தப் பணியை முடித்துக் கொண்டு, வேறு சில வேலை களையும் முடித்துக் கொண்டு, நான் இன்றைக்குதான் வருவேன் என்று சொன்ன நேரத்தில், "இல்லை, நீங்கள் 5 மணிக்கு வந்தால் நான் 6 மணிக்கு வைத்துக் கொள்கிறேன்" என்று சொல்லி, நேரடியாக விமான நிலையத்தில் இருந்து என்னை கைது செய்து உங்களிடத்தில் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறார் சேகர்பாபு என்றால், நான் எண்ணிப் பார்க்கிறேன், என்னையே இவ்வளவு வேலை வாங்குகிறாரே... உங்களை எவ்வளவு வேலை வாங்குவார் என்ற பயம் - பதட்டம் எனக்கு இருக்கிறது.

அவரைப் பின்பற்றி மற்ற மாவட்டக் கழகத்தின் செயலாளர்களும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூரில் பணியாற்று வார்களேயானால் நிச்சயமாக இந்த 33 தொகுதிகளையும் நம்முடைய தலைவரின் கரங்களில் ஒப்படைக்க முடியும் என்று நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**சேகர்பாபுவின் வல்லமை!**

இயல்பாக செய்ய வேண்டிய எதையும் இயல்பாக மட்டுமில்லாமல் பிரம்மாண்டத் தோடு செய்து, அதில் ஒரு பெருமிதத்தை காட்டக்கூடிய வல்லமை நம்முடைய சேகர்பாபு-விற்கு மட்டும்தான் உண்டு என்பதை நான் அறிவேன்.

அந்த விதத்தில் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கும் அவருக்கும், அவரோடு துணை நிற்கின்ற நம்முடைய ஜோசப் சாமுவேல் அவர்களுக்கும், வெற்றியழகன் அவர்களுக்கும், அவர் களோடு இணைந்து பணியாற்றி இருக்கும் பகுதிக் கழகத்தின் செயலாளர்களுக்கும் - வட்டக் கழகத்தின் செயலாளர்களுக்கும் - தொகுதியின் பார்வையாளர்களுக்கும் என்னுடைய நன்றியை - பாராட்டுதலை - வணக்கத்தை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுக்கு ஒன்றும் புதிது அல்ல... திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தேர்தல் பணி எப்படி செய்வார்கள் என்பதை 1962-களில் பக்தவச்சலம் பட்டவர்த்தனமாக சொன்னார், 'என்னதான், நம்மிடத்தில் இருக்கும் பண பலம் - நம்மிடத்தில் இருக்கும் டெல்லி அதிகாரத்தின் பலம், இத்தனையும் வைத்து காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருந்தாலும்கூட, 50 சட்டமன்ற உறுப்பினர்களை, பணம் இல்லாமல் - பதவி இல்லாமல் - டெல்லியின் அதிகாரம் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிறதே, அதற்கு என்ன காரணம் என்று தெரியுமா?" என்று காங்கிரஸ் கட்சியின் செயற்குழுவில் அவர் பேசினார். அது செயற்குழு அல்ல, அன்றைக் கெல்லாம் காரிய கமிட்டி என்று அவர்கள் சொல்வார்கள்.

அந்தக் காரிய கமிட்டியில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றதற்கு பிறகு அவர் சொன்னார், நாம் பணத்தோடு செல்கிறோம்; அதிகாரத்தோடு செல்கிறோம்; அனைத்து பலத்தோடும் செல்கிறோம்; ஆனால், தி.மு.க. தொண்டன் ஒரு சிங்கிள் டீ-யை குடித்துவிட்டு பார்க்கின்ற வேலையை, நம்மால் பார்க்க முடியவில்லை. இது 1962-இல் பக்தவத்சலம் சொன்னது.

அன்றைக்கு பொட்டல் வெளியில் ஒன்றியக் கழகக் கூட்டம் நடக்கும்; இன்றைக்கு பந்தல் மாறி இருக்கிறது. சுட்டெரிக்கும் வெளியிலே கூட்டம்; இன்றைக்கு ஏ.சி.-இல் உட்கார்ந்து இருக்கிறோம். அன்றைக்கு சிங்கிள் டீ; இன்றைக்கு சேகர்பாபு, காடை, கவுதாரி பிரியாணி வரை சென்று விட்டார். உணவு மாறி இருக்கிறது; உடை மாறி இருக்கிறது; பந்தல் மாறி இருக்கிறது; திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டனின் வீரியம் இன்னும் மாறவில்லை என்பதற்கு அடையாளம்தான் இந்தப் பந்தல். அதே வீரியத்தை நான் பார்க்கிறேன்.

சிங்கிள் டீ கொடுத்து, ஒன்றிய கழகத் தேர்தலை நடத்தி, அந்த ஒன்றிய கழகத்தின் செயலாளராக பெரம்பலூரில் இருந்தவன் நான். அதற்குப் பிறகு கலைஞரால், அரியலூர் - பெரம்பலூர் ஒரே மாவட்டமாக இருந்தபோது, மாவட்டக் கழகத்தின் செயலாளராகவும் இருந்தவன் நான். கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக தமிழ்நாடு முழுவதும் சுற்றியவன். இப்போது துணைப் பொதுச் செயலாளர்.

நான் அந்த உணர்வோடு சொல்கிறேன், ஏதோ பக்தவச்சலம் சொன்னார் என்பதற்காக மட்டுமல்ல. நம்முடைய தொழில்நுட்பம் மாறி இருக்கிறது; வசதிகள் மாறி இருக்கிறது; வாய்ப்புகள் மாறி இருக்கிறது; நடந்தே பொதுக்குழுவிற்கு சென்ற தொண்டர்களை அறிவேன்; மாட்டு வண்டி கட்டிக்கொண்டு கூட்டத்திற்குச் சென்றவர்களை அறிவேன்; இரவில் பேருந்தை விட்டுவிட்டு, பேருந்து நிலை யத்தில் படுத்திருந்துவிட்டு, அடுத்த நாள் பொதுக்கூட்டத்தை கேட்டுவிட்டு வந்தவர்களை எல்லாம் அறிவேன்.

**பெரியார் – அண்ணா – கலைஞர் ஏற்றிய இலட்சிய தீபம்!**

இன்றைக்கு எல்லோரிடத்திலும் கார் இருக்கிறது; இருசக்கர வாகனம் இருக்கிறது; ஆனால் பெரியார் - அண்ணா - கலைஞர் ஏற்றி வைத்த லட்சிய தீபத்தை இன்னும் திராவிட முன்னேற்றக் முன்னேற்றக் கழகம் மறக்காமல் இருக்கிறது என்பதற்கு அடையாளம்தான் இந்தக் கூட்டம்.

எனவே, இப்படிப்பட்ட எழுச்சிமிக்க கூட்டத்தை நடத்திக் காட்டியிருக்கும் அத்தனை பேருக்கும் - கலந்து கொண்டி ருக்கும் உங்களுக்கும் என்னுடைய சிரம் தாழ்ந்த வணக்கத்தை பாராட்டுதலை மீண்டும் மீண்டும் புலப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

நான் டெல்லியில் அதிகமாக இருக்கும் காரணத்தினால், இங்கு வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் நான் ஒரு செய்தியை சொல்கிறேன். உலகத்தில் எந்த ஒரு தத்துவமும், அது நல்ல தத்துவமோ - கெட்ட தத்துவமோ, எந்த ஒரு தத்துவமும் 100 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்ததாக - ஆட்சியில் இருந்ததாக வரலாறு இல்லை.

**நூறு ஆண்டுகள் உயிர்ப்போடு!**

ஆனால், இந்தியாவில் ஒரு தத்துவம் 100 ஆண்டுகளுக்கு முன்னால் துவக்கப்பட்டு, எதை வேண்டுமானாலும் நாங்கள் எங்கள் இனத்திற்காக - மொழிக்காக - மண்ணுக்காக எதிர்க்கத் துணிவோம்; சாதி எங்களுக்கு வேண்டியதில்லை; எங்களை



இணைப்பது தமிழ்தானே தவிர, சாதி அல்ல; அந்தச் சாதியை ஒழிக்க வேண்டும் என்று சொன்னால், மதத்தைகூட நாங்கள் விமர்சிப்போம்; இல்லை, மதம் கடவுளால் படைக்கப்பட்டது என்றால், அந்தக் கடவுளையேகூட கேள்வி கேட்போம் என்று ஒரு இயக்கத்தை துவக்கி, ஒரு தத்துவத்தை தந்து, அந்தத் தத்துவம் நூறு ஆண்டுகளாக உயிர்ப்போடு மட்டுமல்ல; இன்னமும் ஆட்சிக் கட்டிலில் இருக்கிற வரலாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் - தந்தை பெரியாரின் தத்துவத்திற்கும் - திராவிட தத்துவத்திற்கும்தான் உண்டு.

ஆனால், எதில் முரண்பாடு என்றால், 1925-இல் தோன்றி, சுயமரியாதை இயக்கத்தின் 100-வது ஆண்டைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். நாளை காலை 10.30 மணிக்கு, நானும் - திராவிடர் கழகத்தின் ஆசிரியர் அவர்களும் சென்னை பல்கலைக்கழகத்தில் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு ஆங்கிலத்தில் உரையாற்ற இருக்கிறோம். இந்தியாவில் இருக்கிற அனைத்து பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சமூக நீதியில் அக்கறை உள்ள தலைவர்களும் பேச இருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

திராவிடர் கழகத்தின் தலைவருக்கு 92 என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருக்கு 72. ஒருவர் தத்துவத்தை பேசுகிறார்; இன்னொருவர் தத்துவத்தை ஆட்சியில் வைத்திருக்கிறார்; ஆக்ஸ் ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் சென்று தத்துவம் பேசுகிறது. இவ்வாறு உயிர்ப்போடு தத்துவம் - உயிர்ப்போடு தலைவர்கள் இருக்கிற இயக்கம், வேறு எங்கும் கிடையாது.

ஆனால் நமக்கு இருக்கும் மிகப்பெரிய ஆபத்து. அதே 1925-இல்தான் ஆர்.எஸ்.எஸ்.-உம் துவக்கப்பட்டது. எப்படி நாம் 1967-இல் ஆட்சிக்கு வந்தோமோ, அதேபோல் அவர்கள் 1967-இல் ஆட்சிக்கு வரவில்லை; 1971-இல் வரவில்லை; 1976-இல் வரவில்லை; 1986-இல் வரவில்லை; 1999-இல்தான் வந்தார்கள். அதற்குப் பிறகும் பத்தாண்டு காலம் இல்லை.

**மோடி – அமித்ஷா தலைமையில் கோரத் தாண்டவம்!**

ஆனால், இப்போது மோடி-அமித்ஷா தலைமையில் ஒரு கோரத்தாண்டவம். எந்த மாநிலத்தின் மொழியும் இருக்கக் கூடாது; எந்த மாநிலத்தின் மண்ணுக்கும் பண்பாடு என்று இருக்கக் கூடாது; அனைத்தும் ஒரே மொழி; ஒரே பண்பாடு; ஒரே மதம்; மாற்று மதத்துக்காரர்கள் இங்கு உயிரோடு இருக்கலாம். பிழைத்துக் கொள்ளலாம். அவர்கள் ஆட்சி செய்ய முடியாது; அதிகாரத்திற்கு வரக்கூடாது; அவர்கள் இரண்டாம் தர குடிமக்கள் என்று சொல்லும் ஒரு தத்துவம் நம்முடன் போட்டி போடுகிறது.

அனைத்தும் சமம் என்பது திராவிட மாடல்; அனைத்தும் சமம் அல்ல, நாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்று சொல்லும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் இன்றைக்கு ஆட்சியில் அங்கே இருக்கிறது.

இவ்வாறு 28 மாநிலங்களைக் கொண்ட இந்திய துணைக் கண்டத்தில், அவர் களுடைய தத்துவம் ஏறத்தாழ 75 சதவீதம் பறந்து விரிந்து, தேர்தலில் திருட்டுத்தனம் செய்து எப்படியோ ஆட்சிக்கு வந்து, இன்றைக்கு அசுர பலத்தில் இருக்கிறார்கள். அவர்களை எதிர்ப்பதற்கு யாருக்கும் திராணி இல்லை. E.D., Income Tax, C.B.I. இத்தனையும் ஏவுகிறார்கள்.

மற்றக் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் ஒன்று கூட்டணிக்கு சென்று விடுகிறார்கள் அல்லது குறைந்தபட்சம் அமைதி காக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு குரல், 'நாங்கள் டெல்லிக்கு அவுட் ஆஃப் கண்ட்ரோல்'. எங்களை இயக்குவது, பெரியார் - அண்ணா - கலைஞர் என்று சொல்லும் ஒற்றை மனிதன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற ஒரே மனிதன்.

நாடாளுமன்றத்தில் எங்களிடத்தில் அனைவரும் கேட்பது, எங்களால் இயலவில்லை; இந்தியாவைக் காப்பாற்ற - அரசியல் சட்டத்தைக் காப்பாற்ற - இந்தியாவின் பன்முகத்தன்மையைக் காப்பாற்றுகின்ற ஒரே தகுதி உள்ள தலைவன் சென்னையில் இருக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று வடபுலத்தில் இருக்கும் தலைவர்கள் சொல்கிறார்கள்.

எவ்வளவு பெரிய அநீதி? எத்தனை புயல் வந்திருக்கிறது? எத்தனை வெள்ளம் வந்திருக்கிறது? கேட்டது 11 ஆயிரம் கோடி ரூபாய்; கொடுத்தது 450 கோடி ரூபாய். நமக்கு வர வேண்டிய ஜி.எஸ்.டி. வருவ தில்லை; தர வேண்டிய பணத்தை தரவில்லை; நம்முடைய பாடத்திட்டத்தை அழிக்க முயற்சிக்கிறார்கள்; நம்முடைய அடையாளத்தை அழிக்க முயற்சிக்கி றார்கள். ஆனால் இத்தனைக்கும் பிறகும் இந்தியாவின் வளர்ச்சி GDP 9.69; ஆனால் தமிழ்நாட்டின் வளர்ச்சி 11.65 என்று சொன்னால், இது தகுதி உள்ள ஒரு தலைவரால் மட்டும்தான் முடியும்.

எனவே அப்படிப்பட்ட ஒரு தத்துவம் - அப்படிப்பட்ட ஒரு தலைமை - அப்படிப்பட்ட தகுதி வாய்ந்த ஆட்சி, இந்த மூன்றையும் காப்பாற்றும் மகத்தான பொறுப்பு, என் தோளில் இல்லை; நான் இன்னும் சொல்கிறேன், சேகர்பாபு தோளில்கூட இல்லை; வெற்றியழகன் தோளிலே இல்லை; பிரியா தோளிலே இல்லை; நான் இன்னும் உரிமையோடு சொல்கிறேன், நம்முடைய தலைவர் தோளில்கூட இல்லை; அவ்வளவு பெரிய பொறுப்பை - அவ்வளவு பெரிய சுமையை கட்டிக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்கள் தோளிலே இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்.

**நம்முடைய தத்துவம் – மகத்தான தத்துவம்!**

அதைத்தான் நேற்றைய தினம் காணொலிக் காட்சி மீட்டிங்கில் சொன்னார். நான் முதலமைச்சராக இருக்கிறேன்; திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கிறேன்; மொழியை - மண்ணை - மானத்தைக் காக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்று சொன்னால், அதற்கு நான் காரணம் அல்ல என்று மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கு அறிவுரை தந்தார்.

அங்கே இருக்கும் கிளைக் கழகச் செயலாளர் - பி.எல்.ஏ.2 - கடைசித் தொண்டன் - அவர்களையும் பாருங்கள். அவர்கள்தான் இந்த இயக்கத்தின் உயிர்நாடி என்று நேற்றைக்கு எங்களிடத்தில் பேசி இருக்கிறார் நம்முடைய தலைவர்.

எனவே அப்படிப்பட்ட ஒரு தலைவர் - அப்படிப்பட்ட ஒரு தத்துவம். நம்முடைய தத்துவம் - மகத்தான தத்துவம்; நூறாண்டுகள் உயிர்ப்போடு இருக்கும் தத்துவம்.

அந்தத் தத்துவத்தை கம்யூனிசத் தலைவர்களால் உலக அரங்கில் காப்பாற்ற முடியவில்லை. இந்தியாவில் 50 மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேருவை மிரட்டிய காலம் உண்டு. கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுந்தால் நாடாளுமன்ற மேலவையும், நாடாளுமன்ற அவையும் அலறும். அவ்வளவு பெரிய அறிவு ஜீவிகள் இருந்த இடம். இன்றைக்கு 4, 5 பேரோடு காய்ந்து போய்விட்டது.

இன்றைக்கு அவர்களுக்கு இருக்கும் ஒரே தத்துவ எதிரி, நாம்தான். நாமும் இல்லை என்று சொன்னால், இந்தியா இருக்காது; அரசியல் சட்டம் இருக்காது.

எனவேதான்சொல்கிறேன், எத்தனையோ திட்டங்களை தலைவர் தந்திருக்கிறார்... நலம் காக்கும் ஸ்டாலின், உங்களுடன் ஸ்டாலின், உரிமைத் தொகை. இந்தத் திட்டங்கள் அனைத்தையும் தாண்டி, இதற்காக மட்டுமல்ல நாம் உழைக்க வேண்டியது.

நாம் உழைக்க வேண்டியது, நம்முடைய தாத்தா எத்தனை பேர் பட்டதாரிகள்; நம்முடைய தாத்தாவிற்கு தாத்தா எத்தனை பேர் பட்டதாரிகள்; நம்முடைய தந்தை எத்தனை பேர் பட்டதாரிகள்; ஆனால் இன்றைக்கு நாம் எத்தனை பேர் பட்டதாரி. நாம் பட்டதாரி மட்டுமல்ல, நம்முடைய பிள்ளைகள் எங்கெங்கெல்லாம் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மேடையில் இருக்கும் பலபேருடைய பிள்ளைகள் லண்டனில் படிக்கிறது. என்னுடைய குழந்தையும் லண்டனில் படிக்கிறது.

என்னுடைய தாத்தா இலங்கைக்கு ஓடினார்; சேகர்பாபுவின் தாத்தா வசதி இருந்திருக்கும், ஆனால் நிச்சயமாக படித்திருக்க மாட்டார்; சேகர்பாபுவே அதிகம் படிக்கவில்லை; அது நல்லது. இன்னும் கொஞ்சம் படித்திருந்தால், எங்களுக்கு ஆபத்து; இதோடு விட்டோம். ஆனால் உங்களுடைய பையன் இன்றைக்கு லண்டனில் இருக்கிறான்; இவையெல்லாம் யாரால் நிகழ்ந்தது? இந்தத் தத்துவத்தால் நிகழ்ந்தது; தலைவரால் நிகழ்ந்தது.

எனவே, இப்படிப்பட்ட ஒரு தத்துவத்தை - தலைமையைக் காப்பாற்றுவது - அரசாங்கத்தை காப்பாற்றுவது மட்டுமல்ல; அந்த அரசாங்கம் தருகின்ற திட்டங்களுக்கு மட்டுமல்ல; அதையெல்லாம் தாண்டி உங்களிடத்தில் உரிமையோடும் - உணர்வோடும் வேண்டி கேட்டுக் கொள்கிறேன், எதிர்கால தலைமுறையைக் காப்பாற்றுவதற்கு இந்த தலைவனை விட்டால் இந்த தத்துவத்திற்கு வேறு ஆள் இல்லை. எனவே, அந்தப் பொறுப்புணர் வோடு, பி.எல்.ஏ.2-ஆக இருந்தாலும் ... ஆக, - பி.டி.ஏ.ஆக இருந்தாலும் பணி யாற்றுங்கள்.

**மிகப்பெரிய வாய்ப்பு!**

உங்களிடம் இருக்கும் மகத்தான மிகப்பெரிய வாய்ப்பு, என்னதான் பணியாற்றினாலும் - என்னதான் சுய நலமில்லாமல் பணியாற்றுவதற்கு தயாராக இருந்தாலும், உங்களை ஊக்கப்படுத்து வதற்கு நல்ல தலைமை வேண்டும். அந்த தலைமை சேகர்பாபு வடிவத்தில் உங்களுக்கு கிடைத்திருக்கிறது. தேர்தலுக்கு செய்ய வேண்டிய அனைத்து உதவி களையும் அவர் செய்வதற்கு தயாராக இருக்கிறார்.

அவர் என்னென்ன பணிகளை எல்லாம் இன்னும் 3, 6 மாதத்தில் செய்யப்போகிறேன்; எப்படி எல்லாம் பி.எல்.ஏ.2-க்களை அணுக வேண்டும்; அவர்களின் தேவைகள் என்ன? என்பதை எல்லாம் உணர்ந்து, அவர் என்னிடத்தில் சில ரகசியங்களைச் சொல்லி இருக்கிறார். இப்போது சொன்னால், அவர் தருகிறபோது அது சுவாரஸ்யமாக இருக்காது. மிக விரைவாக உங்களுக்கு அனைத்து வசதிகளும் தெரியும்.

என்னுடைய வேலை என்னவென்றால், மற்ற மாவட்டச் செயலாளர்களை தூண்ட வேண்டும்; சேகர்பாபுவை பார்த்தீர்களா... அவர் இவ்வாறு செய்கிறார் என்று தட்டிக் கொடுக்க வேண்டும். அவ்வாறு தட்டி விட்டு வேலை வாங்குவதுதான் என்னுடைய வேலை.

எனவே அந்த விதத்தில் நீங்கள் மிக பத்திரமாக இருக்கிறீர்கள்; பாதுகாப்பாக இருக்கிறீர்கள். உங்களுடைய தேவை களை சேகர்பாபு நிறைவேற்றுவார். எங்க ளுடைய தேவைகளை நீங்கள் நிறை வேற்றுவீர்கள். நம்முடைய தேவைகளை தலைவர் நிறைவேற்றுவார். தமிழ்நாட்டில் தேவையை அவர் பார்த்துக் கொள்வார்.

அதை எல்லாம் தாண்டி, சட்டமன்ற தேர்தலுக்குப் பிறகு இந்தியாவின் தேவையையும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் நிறைவேற்றும்... நிறை வேற்றும்... நிறைவேற்றும்... அதற்காக வாருங்கள் உழைப்போம் என்று சொல்லி, உங்களை எல்லாம் அழைத்து, உங்களையெல்லாம் வணங்கி, சேகர்பாபு அவர்களுக்கும் - சாமுவேல் ஜான்சன் அவர்களுக்கும் - வெற்றியழகன் அவர்க ளுக்கும் - தாயகம் கவிக்கும் - அவர்களோடு பணியாற்றிய அனைத்து வட்டக் கழகச் செயலாளர்களுக்கும் - பகுதிக் கழகச் செயலாளர்களுக்கும் - மாநில அணியின் பொறுப்பாளர்களுக்கும் என்னுடைய நன்றியை பாராட்டுதல்களை வணக்கத்தை மீண்டும் மீண்டும் தெரிவித்து விடை பெறுகிறேன்.

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. உரை யாற்றினார்.